(Under Section.173 BNSS)

# FIRST INFORMATION REPORT

முதல் தகவல் அறிக்கை

~~(Under Section 154 Cr.P.C.)~~

~~(கு.ந.வி.தொ.பிரிவு 154-இன் கீழ்)~~

TAMIL NADU POLICE

INTEGRATED INVESTIGATION FORM-I

C 8102180

1. District மாவட்டம் : Coimbatore    PS: காவல்நிலையம் V&AC    Year: ஆண்டு 2025    FIR No.: மு.த.அ. எண் 06/2025/AC/CB    Date: நாள் 02.04.2025

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption Act, 1988 as amended in 2018.    Sections பிரிவுகள்: 7(b), 7(a)
   (ii) Act சட்டம்:    Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்:    Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்    Date from : நாள் முதல் 26.03.2025 &    Date to : நாள் வரை 27.03.2025
   Time Period : நேர அளவு    Time from : நேரம் முதல்    Time to : நேரம் வரை
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 02.04.2025    Time : நேரம் 10.15 hrs
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் GD Vol-I    Time : நேரம் 10.15 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Computer Typed in Tamil

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் At about 50 km in South.
   Beat Number : முறைக் காவல் எண்    (b) Address : முகவரி O/o. Makkinampatti Village Panchayat Pollachi South Block, Coimbatore District
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர்    District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் Tr. N. Manickavasagam    (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் Nachimuthu
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 47/2025    (d) Nationality : நாட்டினம் Indian    (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள்    Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் Farmer    (g) Address : முகவரி Door No. 1/69, Shellappampalayam, Udumalpet Taluk, Tiruppur District.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary) தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   Tr. M. Senthilkumar, Panchayat Secretary, Makkinampatty Village Panchayat, Pollachi South Block, Coimbatore District

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

   Delay by the complainant.

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Submitted : Before the Hon'ble Special Judge, Special Court. for cases under the Prevention of Corruption Act, Coimbatore.

Separate sheets attatched herewith.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ........................ Rank ........................ to take up the Investigation / Refused Investigation / transferred to PS..................................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ................................ பதவி ........................ நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ................................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

N.Mani 02-4-2025 — [signature] 02/04/2025

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
02.04.2025 at 12.15 hrs

Name: பெயர் R. Ezhilarasi,
Rank: நிலை Inspector of Police No. எண் ...
Vigilance and Anti-Corruption
Coimbatore.
02.04.2025.

* GCP-240-34(Type-2) 90,000 Cps -21 3 16(HCL-12)p 2

**கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் தடுப்பு சட்ட வழக்குகளுக்கான சிறப்பு நீதிமன்றம், கோயம்புத்தூர் அவர்கள் முன்பு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது:**

*கோயம்புத்தூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.06/2025/ AC/CB, u/s. 7(b) & 7(a) of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018 வழக்கின் முதல் தகவலறிக்கை வரிசை எண்.8102180-ன் தொடர்ச்சி.*

இன்று 02.04.2025-ம் தேதி புதன்கிழமை காலை 10.15 மணிக்கு காவல் ஆய்வாளர் R.எழிலரசி ஆகிய நான் நிலைய அலுவலில் இருந்தபோது, திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை, செல்லப்பம்பாளையத்தை சேர்ந்த நாச்சிமுத்து என்பவரது மகன் திரு.மாணிக்கவாசகம் என்பவர் கோயம்புத்தூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அலுவலகம் ஆஜராகி கணினியில் தமிழில் தட்டச்சு செய்யப்பட்ட புகாரினை என்னிடம் கொடுத்தார். நான் அந்த புகாரினை படித்து பார்த்து, புகார் சம்மந்தமாக இரகசிய விசாரணை மேற்கொண்டதில் கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சி தெற்கு வட்டாரத்திற்குட்பட்ட மாக்கினாம்பட்டி பஞ்சாயத்தின் செயலாளராக (கிளார்க்) பணிபுரிந்து வரும் திரு.M.செந்தில்கும ார் என்பவர், புகார்தாரரின் மனைவின் பெயரில் புதிதாக வாங்கிய வீட்டிற்கு சொத்துவரி நிர்ணயம் செய்து கொடுத்ததற்காக ரூ.2,000/- மற்றும் புதிய குடிநீர் இணைப்பிற்கான அரசு கட்டணமான Security Deposit தொகை ரூ.2,900/-ஐ செலுத்தி அதற்கான ரசீதை பெறுவதற்காகவும் ரூ.4,100/- ஆக மொத்தம் ரூ.6,100/-ஐ லஞ்சமாக கேட்டிருப்பது தெரியவந்தது. மேலும் புகாரின் அடிப்படையில் எதிரியின் நற்பெயர் குறித்து இரகசிய விசாரணை மேற்கொண்டதில் எதிரியின் நடத்தை சர்ச்சைக்குரியது என்றும், புகார்தாரருக்கும் எதிரிக்கும் தனிப்பட்ட முறையில் ஏதேனும் முன்விரோதம் உண்டா என்பது குறித்தும் மேற்கொள்ளப்பட்ட இரகசிய விசாரணையில் அவ்வாறு முன்விரோதம் எதுவுமில்லை என்பதும் தெரியவந்தது. நான் மேற்கொண்ட ரகசிய விசாரணையில் இருந்து எதிரி மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய தகுந்த முகாந்திரம் இருப்பதாக தெரிய வந்ததால், சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை இயக்குநரகத்தில் வாய்மொழியான ஒப்புதல் பெற்று, இன்று 02.04.2025-ம் தேதி 10.45 மணி முதல் 11.45 மணி வரை கோயம்புத்தூர் ஊழல் தடுப்பு மற்றும்

கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.06/2025/AC/CB, u/s. 7(b), 7(a) of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018-ன் படி மேற்படி எதிரி திரு.M.செந்தில்குமார் என்பவர் மீது குற்ற வழக்கு பதிவு செய்தேன். புகார்தாரர் அளித்த புகாரின் விபரம் பின்வருமாறு: அனுப்புநர்: N.மாணிக்கவாசகம், வயது 47, த/பெ.நாச்சிமுத்து, கதவு எண்.1/69, செல்லப்பம்பாளையம், உடுமலைப்பேட்டை, திருப்பூர் மாவட்டம். பெறுநர்: காவல் ஆய்வாளர் அவர்கள், லஞ்ச ஒழிப்பு துறை, கோயம்புத்தூர் மாவட்டம். அம்மா, நான் திருப்பூர் மாவட்டம் உடுமலைப்பேட்டையில் உள்ள செல்லப்பம்பாளையத்தில் எனது குடும்பத்துடன் வசித்து வருகிறேன். நான் எனக்கு சொந்தமாகவுள்ள விவசாய பூமியில் விவசாயம் செய்துவருகிறேன். எனது மனைவியின் பெயர் அருணாதேவி. நான் கடந்த 24.02.2025-ம் தேதியன்று கோயம்புத்தூர் மாவட்டம் பொள்ளாச்சி வட்டம் மாக்கினாம்பட்டி கிராமம், க.ச.எண் 179/4-ல் அமைந்துள்ள ஸ்ரீ ராஜகணபதி நகர் லேஅவுட்டில் சுமார் 3095 சதுரடியுள்ள பிளாட் எண்.57-ன் ஒரு பாகத்தில் சுமார் 1535 ¼ சதுரடி அளவுள்ள இடத்தில் சுமார் 1200 சதுரடி அளவுள்ள தார்சு வீட்டினை, திரு.மகேந்திரன் என்பவரது மனைவி திருமதி.மகாலட்சுமி என்பவரிடம் ரூ.20,00,000/-க்கு விலைபேசி அதை பொள்ளாச்சி சார்பதிவாளர் அலுவலக ஆவண எண்.2172/2025-ன் படி எனது மனைவியின் பெயருக்கு கிரையம் பெற்றேன். மேற்படி வீட்டிற்கான சொத்துவரி மற்றும் குடிநீர் இணைப்பு ஆகியவற்றை நிர்ணயம் செய்வதற்காக கடந்த 21.03.2025-ம் தேதியன்று நானும் எனது மனைவியும், கோயம்புத்தூர், பொள்ளாச்சி தெற்கு வட்டாரத்திற்குட்பட்ட மாக்கினாம்பட்டி பஞ்சாயத்து அலுவலகத்திற்கு சென்று Bill Counter-ல் இருந்த பெண் அலுவலரிடம் மேற்படி சொத்துவரி மற்றும் குடிநீர் இணைப்பு சம்மந்தமாக விசாரித்து விபரம் தெரிந்துகொண்டு அடுத்தநாளான 22.03.2025-ம் தேதியில் அவ்வலுவலகத்தில் உரிய ஆவணங்களை இணைத்து எனது மனைவியின் பெயரில் விண்ணப்பித்தோம். அவ்விண்ணப்பத்தின் அடிப்படையில் கடந்த 22.03.2025-ம் தேதி மதியம் சுமார் 12.00 மணியளவில் மாக்கினாம்பட்டி பஞ்சாயத்தின் கிளார்க் திரு.செந்தில்குமார் என்பவர் 9842070785 என்ற

எண்ணிலிருந்து என்னுடைய செல்நம்பரான 9788114492-க்கு தொடர்புகொண்டு மேற்படி எங்களது வீட்டினை ஆய்வு செய்யசென்றுள்ள விபரம் தெரிவித்து, வீட்டின் அமைவிடத்தை என்னிடம் கேட்டுத்தெரிந்துகொண்டு ஆய்வு மேற்கொண்டார். மேலும் அன்றை தினம் அவரது அறிவுரையின் படி உரிய கட்டணங்களை செலுத்துவதற்காக நானும் எனது மனைவியும் மாக்கினாம்பட்டி பஞ்சாயத்து அலுவலகத்திற்கு சென்றுகொண்டிருக்கும்போது அன்று மதியம் சுமார் 2 மணியளவில் 7402520669 என்ற எண்ணிலிருந்து மாக்கினாம்பட்டி பஞ்சாயத்து அலுவலத்திலிருந்து பேசுவதாக ஒரு பெண் அலுவலர் என்னை தொடர்புகொண்டு என்னிடம் அவரது பஞ்சாயத்து கிளார்க் திரு.செந்தில்குமார் கட்டணங்கள் தொடர்பாக பேசினாரா என்று விசாரித்தார். நானும் அவர் பேசிய விபரத்தையும் அலுவலகத்திற்கு வந்துகொண்டிருக்கம் விபரத்தையும் தெரிவித்தேன். அன்றைய தினம் நான் மாக்கினாம்பட்டி பஞ்சாயத்து ஆபிஸின் பில்கவுண்டரில் இருந்த பெண் அலுவலரிடம் சொத்துவரி மற்றும் குடிநீர் இணைப்பு கட்டணம் செலுத்த வந்திருக்கும் விபரத்தை தெரிவித்தபோது அப்பெண் அலுவலர் என்னிடம் ரூ.1,100/-க்கு சொத்துவரிக்கான ரசீதையும், ரூ.2,900/-க்கு குடிநீர் இணைப்பிற்கான Security Deposit-க்கான ரசீதையும் கொடுத்தார். நான் அவற்றை எனது செல்போனில் போட்டோ எடுத்துக்கொண்டேன். மேலும் அப்பெண் அலுவலர் என்னிடம் ரூ.10,600/- செலுத்தும்படி கேட்டார். அதற்கு நான் ஏனுங்க அம்முனி இரண்டு ரசீதுக்கும் சேர்த்து மொத்தம் 4000 ரூபாய்தான, ஏன் 10600 ரூபாய் கேட்கறீங்கன்னு கேட்டேன் அதற்கு அவர் தனக்கு அந்த விபரம் தெரியாது என்றும், கிளார்க் சார்தான் இந்த தொகையை வாங்க சொன்னார், இருங்க அவருகிட்ட கேட்டுட்டு சொல்றேன் என்று சொல்லி கிளர்க்கிடம் போனில் பேசிவிட்டு என்னிடம் கிளார்க் சார் சொத்துவரிக்கான கட்டணத்தை மட்டும் செலுத்தச்சொன்னார் என்றும் குடிநீர் இணைப்பு தொகை சம்மந்தமாக அவரை நேரில் பார்க்கச்சொன்னார் என்றும் தெரிவித்து என்னிடம் சொத்துவரியாக ரூ.1,100/-ஐ பெற்றுக்கொண்டு அதற்கான ரசீதினை மட்டும் என்னை வைத்துக்கொள்ளும்படி தெரிவித்து

என்னிடம் கொடுத்த குடிநீர் இணைப்பு சம்மந்தமாக ரசீதினை திரும்ப பெற்றுக்கொண்டார். அதன் பின்னர் கடந்த 25.03.2025-ம் தேதியன்று நான் கிளார்க் திரு.செந்தில்குமாரை சந்திக்க மாக்கினாம்பட்டி பஞ்சாயத்து அலுவலகம் சென்றபோது அவர் அங்கில்லை எனவே நான் அவரது செல்நம்பரை வாங்கி அவரை தொடர்பு கொண்டு குடிநீர் இணைப்பு கட்டணம் குறித்து கேட்ட்போது அவர் வெளியில் இருப்பதாகவும் அப்புறம் பேசுவதாகவும், குடிநீர் இணைப்பிற்கு விண்ணப்பம் கொடுக்கமாறும் தெரிவித்தார். அதன்படி நானும் எனது மனைவியும், அடுத்தநாள் 26.03.2025-ம் தேதி மதியம் சுமார் 1.15 மணியளவில் மாக்கினாம்பட்டி பஞ்சாயத்து அலுவலகம் சென்று குடிநீர் இணைப்பிற்கு மீண்டும் விண்ணப்பித்துவிட்டு கிளார்க் திரு.செந்தில்குமார் அவர்களை நேரில்சந்தித்து எனது விண்ணப்பம் குறித்து தெரிவித்து, அன்னைக்கே பணம் கட்டியிருப்பேன் பணம் இல்லாததால் கட்டமுடியவில்லை என்று தெரிவித்தபோது, அவர் என்னிடம் உங்களுக்கு தெரியாததா எங்களுக்கும் செலவு இருக்குமில்ல என்று தெரிவித்தார். அதற்கு நான் உங்களை நேரில் சந்தித்து கொஞ்சம் சலுகை கேட்கலாம் என்றிருந்தேன் என்று தெரிவிக்க அதற்கு அவர் புதுசா பிளான் அப்ரூவல் வாங்கினால் ரூ.25,000/- முதல் ரூ.30,000/- வரை செலவாகும் என்றும் நீங்க பார்மாலிட்டீசை விசாரிக்கலயா என்றும் கேட்டார். அதற்கு நான் யாரிடமும் கலந்துக்கலீங்க என்று தெரிவித்து கொஞ்சம் சலுகை பண்ணினால் போதுங்கண்ணா என்று கேட்டபோது, அவர் சலுகைங்கிறது உங்களுக்கு Connection கொடுப்பதே சலுகைதான் என்று தெரிவித்தார். சொத்து வரி ரசீது கொடுத்திட்டதால EB-க்கும் போய் மாத்திட்டு வந்திட்டேனுங்க என்று சொன்னேன். பின்னர் எவ்வளவு கட்டணம் செலுத்தனும்ங்க என்று கேட்டதற்கு அவர், சொத்துவரி ரசீது கொடுத்ததற்கு ரூ.2,000/- மற்றும் குடிநீர் இணைப்பிற்கான Security Deposit உடன் சேர்த்து ரூ.7,000/- ஆக மொத்தம் ரூ.9,000/-ஐ கொண்டு வரும்படியும், அலுவலகம் வரும்போது அவரிடம் பேசும்படியும் தெரிவித்தார். ஆனால் 22.03.2025-ம் தேதி என்னிடம் கொடுத்த மேற்படி குடிநீர் இணைப்பிற்கான Security Deposit தொகைக்கான ரசீதில்

ரூ.2,900/- என்று தான் இருந்தது. இந்நிலையில் 27.03.2025-ம் தேதி பகல் சுமார் 12.00 மணியளவில் கிளார்க் திரு.செந்தில்குமார் அவர்கள் என்னை போனில் தொடர்புகொண்டு ஏன் இன்னும் பணம் கொண்டுவரல என்று கேட்டார். அதற்கு நான் கொஞ்சம் வேலையிருந்ததால வரமுடியலீங்கண்ணா என்றும் அலுவலகம் வரும்போது உங்களிடம் பேசுகிறேன் என்றும் தெரிவித்தேன். மேலும் நானும் எனது மனைவியும் கலந்தாலோசித்ததில் நாங்கள் புதிதாக வாங்கிய வீட்டிற்கு சொத்துவரி நிர்ணயம் செய்ததிற்கும், குடிநீர் இணைப்பிற்கான Security Deposit கட்டணம் ரூ.2,900/- செலுத்தி அதற்கான ரசீதை பெறுவதற்கும் மொத்தமாக 9,000/- ரூபாயை மாக்கினாம்பட்டி பஞ்சாயத்து கிளார்க் திரு.செந்தில்குமார் அவர்களுக்கு லஞ்சமாக கொடுக்க எங்களுக்கு விருப்பம் இல்லை. எனவே மேற்படி திரு.செந்தில்குமார் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு, தங்கள் உண்மையுள்ள, sd.XXXXX 2.4.25 (N.Manickavasagam). Respected Madam, Received the complaint on 02.04.2025 at about 10.15 hrs. sd.XXXXX, 02/04/2025, Inspr., V&AC, CBE. Respected Madam, After conducting a discreet enquiry, a case in Coimbatore V&AC Cr.No.06/2025/AC/CB, u/s. 7(b), 7(a) of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018 was registered by me on 02.04.2025 between 10.45 hrs and 11.45hrs. sd.XXXXX, 02/04/2025, Inspr., V&AC, CBE. இம்முதல் தகவல் அறிக்கையின் அசல் மற்றும் வாதியின் புகார் மனு ஆகியவற்றை கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் தடுப்பு சட்ட வழக்குகளுக்கான சிறப்பு நீதிமன்றம், கோயம்புத்தூர் அவர்களுக்கும் மற்ற நகல்களை சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்து இவ்வழக்கினை விசாரணைக்கு எடுத்துக் கொண்டேன்.

02/04/2025.

(R.எழிலரசி)
காவல் ஆய்வாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
கோயம்புத்தூர்.